International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நெல்லை ஜெயந்தாவின் திணை மயக்கம் கவிதைகளில் சமூகப்பார்வை

**வை. பிந்து**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)

**முனைவர் தி. குமார்**
இணைப்பேராசிரியர், ஆய்வு நெறியாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
சி. முட்லூர், சிதம்பரம்

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியங்கள் மக்களை நல்வழிப்படுத்துகின்றன. நவீன இலக்கியங்களும் பகுத்தறிவின் துணையுடன் சித்தாந்தங்களைப் பதிவு செய்கின்றன. காலந்தோறும் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களையும் அதன் போக்குகளையும் உள்வாங்கி சிறந்த படைப்புகளை உருவாக்குபவர்கள் படைப்பாளிகள் ஆவர். சமுதாயத் தீமைகளுக்கு எதிராக மக்களை விழிப்படையச் செய்யும் வகையில் ஒவ்வொரு படைப்பாளரும் தமது படைப்பைப் படைக்க வேண்டும். சமூக மாற்றத்திற்கு வித்திடும் வகையில் இயற்றப்பட்ட “நெல்லை ஜெயந்தாவின் திணை மயக்கம் கவிதைகளில் சமூகப்பார்வை” எனும் நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது.

**முதன்மைச் சொற்கள்**

மனித நேயம், அரசியல், பகுத்தறிவு, வேளாண்மை, நெல்லை ஜெயந்தா, திணை மயக்கம், சமூகப்பார்வை, சமூகச் சிந்தனை, மனிதநேயம், பகுத்தறிவு, அரசியல் விழிப்புணர்வு, வேளாண் சமூகம், நவீன தமிழ் கவிதை, சமூக விமர்சனம்

## முன்னுரை

ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு புதிய வழியைப் பின்பற்றி கூட்டமாக இணைந்து வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படுகிறது புதிய நோக்கில் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களையும் சமகால போக்குகளையும் எளிமையான சொற்களின் மூலம் வலிமையான கருத்துக்களால் தமது கவிதைகளில் பதிவு செய்பவர்நெல்லை ஜெயந்தா. சமூகவியல் நோக்கில் படைக்கப்பட்டுள்ள நெல்லை ஜெயந்தாவின் திணைமயக்கம் கவிதைகளில் காணப்படும் சமூகச் சிந்தனைகள் மக்களுக்கு மனிதநேயத்தையும் பகுத்தறிவினையும் அரசியல் அறிவினையும் உழைப்பின் அவசியத்தையும் சீர்படுத்த வேண்டும் எனும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## மனிதநேயச் சமூகம்

ஒவ்வொரு மனிதரும் பிறரை மதித்து வாழ்கின்ற நிலையில் இவ்வுலகம் இன்புற்றிருக்கும். பிறரின் துன்பத்தைப் போக்கி அனைவரும் மகிழ்ச்சியாக ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோள் என இலக்கியங்கள் கூறுகின்றன. இன்றைய

சூழலில் சமுதாயத்தில் நடக்கின்ற அநீதிகளுக்கு எதிராகப் பலர் குரல் கொடுக்கின்றனர். சமூகத்தில் நடக்கின்ற தீமைகளைச் சமூக சிந்தனையாளர்களும் மக்கள் நேய பண்பாளர்களும் படைப்பாளர்களும் தங்களின் எதிர்ப்புகளையும் அதற்கான தீர்வுகளையும் தருவதால்தான் இச்சமூகம் இயங்கி வருகிறது. மானுட சமுதாயத்தில் மக்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றே வாழ்ந்து வந்தனர். தமிழரின் பண் பாடும் கலாச்சாரமும் மனிதநேயத்தையும் மக்கள் பண்பாகக் கொண்டு போற்றுகின்ற ஓரினம். ஆனால், தற்பொழுது தமக்குள் சாதிய வேறுபாடுகளை வைத்துக்கொண்டு பிரிவினைக்குவழி வகுக்கின்ற கூட்டத்தாரைச் சாடுவதாக,

**"அந்தப் புறாக்கள்**
**அஃறிணை**
**குருத்வாரா ஓரமும்**
**கூட்டமாய் இரைதேடலாம்**
**சிலுவைகள்**
**மீதமர்ந்தும்**
**சிறகுகள் கோதலாம்**
**தெரிந்தால் சொல்**
**திணை மாறும் வழி"**[1]

என்ற கவிதை அமைகிறது. ஆறறிவு படைத்த மனிதன் தன்னைவிட அறிவு குறைந்த அஃறிணை உயிர்களிடமிருந்து ஒற்றுமையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று இக்கவிதை அமைவதைக் காணலாம். சமுதாயத்தில் வேற்றுமை இன்றி அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்றும் மத நல்லிணக்கத் தையும் மனித நேயத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இதன் மூலம் புலனாகிறது.

இன்று மக்கள் பல்வேறு காரணங்களுக்காக ஒதுக்கப்படுகிறார்கள். “பிறிதின்நோய் தன்நோய் போல் போற்றாக்கடை” எனச் சக மனிதரை உயிராகப் பார்க்கும் பார்வை மக்களிடம் இன்று குறைந்து வருகிறது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று வாழ்ந்த பெருமைக்குரியவர்கள் சில நேரங்களில் அநீதி இழைக்க துணிந்து விடுகின்றனர் என்பதனை,

**"சாதி பூசல்களின்**
**சமரசத்திற்கு பின்**
**நடக்கப் போகிறது**
**தேரோட்டம்"**[2]

என்ற வரிகள் ஒவ்வொரு திருவிழா நடைபெறும் பொழுதும் ஏதாவது விபரீதம் நடந்துவிடும் என்ற பயத்துடன் மக்கள் விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

நீதிக்காக வாழ்ந்த மன்னராட்சி முறையும் இன்றைய மக்களாட்சி முறையும் அனைவரா லும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். கவிஞர் மற்றுமொரு கவிதையில்,

**"யார் மணி அடிப்பது**
**பறவைகளின் மீதும்**
**ஏறி விடுகிற**
**தேர்ச்சக்கரங்களுக்காக"**[3]

என்ற வரிகள் சமூகத்தில் நடக்கும் அநீதியான செயல்களைக் கண்டு வருந்தும் நோக்கில் அமைந்துள்ளன. சமூக நீதியும் மக்களுக்கான அரசும் இப்படிப்பட்ட சமூகக் கேடுகளைக் களைய வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என இதன் மூலம் அறிய முடிகிறது.

தமிழரின் வாழ்வியலில் பெரியோரை மதித்தலும் பெற்றோரைப் போற்றலும் மிகச்சிறந்த பண்பாக இருந்திருக்கிறது. ஆனால், இன்றைய சமூகத்தில் அறநெறி சார்ந்து வாழும் வாழ்க்கை முறைகள் குறைந்து கொண்டே வருகின்றன. பெற்றோர் களை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்றவர்கள் அதிகமாகப் பெருகிவிட்டனர். பெற்றோருக்கு ஆற்றவேண்டிய கடமைகளில் இருந்தும் தவறுகிறார்கள். அப்படிப்பட்டவர் களை மக்கள் என்று அழைப்பதை விட மாக்கள் என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும் என்பதனை,

**"இந்த**
**மனித காட்சி சாலைகளை**
**எப்போதாவது**

**பால் குடித்த**

**விலங்குகள் வந்து**

**பார்த்துவிட்டுப் போகும்"[4]**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இதன் மூலம் பெற்றோர்களைப் பேணி காப்பது இன்று ஒவ்வொருவரின் கடமையாகும். முதியோர் இல்லங்கள் பெருகிவரும் நிலையில் பெற்றோர்களைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நெல்லை ஜெயந்தா வலியுறுத்துகிறார்.

### பகுத்தறிவுச்சமூகம்

நவீன இலக்கியங்களின் மூலம் பொதுவு டைமை கருத்துக்கள் மற்றும் பகுத்தறிவு சிந்தனைகள் மக்களைச் சென்றடைகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழக வரலாற்றிலும் பல மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் தந்தைப் பெரியார் உள்ளிட்ட தலைவர்களும் பல்வேறு இயக்கங்களும் சமூகத்தில் காணப் பட்ட மடமையை விரட்ட பாடுபட்டனர். இன்றைய காலகட்டத்தில் ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்கள் பகுத்தறிவுடன் வாழ வேண்டும், மூடநம்பிக்கைகளிலிருந்து விலகி வெளிவர வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார். இதனை,

**"துதிக்கையைப்**

**பிச்சைப்பாத்திரமாய்**

**மாற்றிவிட்ட**

**யானைப்பாகர்கள்"[5]**

என்ற கவிதை மூலம் வலியுறுத்துகிறார். இக்கவிதை யானை தன் பலத்தை அறியாமல் பாகன் சொல்வதைக் கேட்டு செயல் படுவதைப்போன்று, மக்களும் தங்களுக்குள் இருக்கும் ஆற்றலை நம்பாமல் அதிர்ஷ்டம், மூடநம்பிக்கை போன்றவற்றைத் தேடிச் செல்வதையும், தன்னை நம்பாமல் வாழ்வதனையும் உணர்த்துகிறது. இது போன்று மற்றொரு கவிதையில்,

**"சீட்டெடுப்பது**

**தங்களின் கெட்ட காலம்**

**என்பதை**

**கிளிகள் அறியாமல்**

**பார்த்து கொள்கிற**

**சோதிடர்கள்"[6]**

என்ற வரிகள் மூடநம்பிக்கையில் மூழ்கி இருக்கும் மக்களின் அறியாமையை நினைத்து வருந்துவதாக அமைந்துள்ளது.

எல்லாருக்கும் எல்லாவற்றையும் பகிர்ந்து கொடுத்து வாழ வேண்டும் என்ற அறத்தைப் பின்பற்றி பிறரின் துன்பத்தைப் போக்கிய வர்கள் தமிழர்கள். இன்றைய சமுதாயத்தில் சுயநலத்திற்காக வாழ்பவர்கள் பெருகி விட்டனர். பிறரின் வளத்தைச் சுரண்டி தான் மட்டும் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் வாழ்க்கை நடத்துகிறார்கள். எளிய மக்கள் இதனால் பாதிக்கப்படுகின் றனர். குடிசைகளில் வாழும் அவர்களின் வாழ்க்கைத்தரம் எப்பொழுது மாறும் எனக் கவிஞர் தமது கவிதையில் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**"எப்படி ரசிப்பது**

**மழையை**

**ஒழுகும் குடிசைகளில்"[7]**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. சமூக பொருளாதார வளர்ச்சி பெற்று விட்ட நமது சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு இன்றும் காணப்படுகின்றன. ஏழை எளிய மக்களும் பொருளாதாரத்தில் மேம்பட வேண்டும். அவர்களது வாழ்க்கை தரம் உயர்ந்தால் தான் நாடும் முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் என்பது இதன் மூலம் புலனாகிறது.

### சமூக அரசியல்

மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மூலம் மக்களுக்காக நடைபெறும் ஆட்சி முறை ஜனநாயகம் ஆகிறது. மக்கள் தங்களுக்கானத் தலைவர்களைத் தாங்களே தங்கள் வாக்குரிமையின் மூலம் தேர்ந்தெடுப் பர். இன்றையச்சூழலில் அரசியல்வாதிகளின் செயல்பாடுகள் மக்களைப் பாதிப்படைய வைக்கின்றன. சட்டசபையில் அரங்கேறுகின்ற காலணி ஆதிக்கத்தையும் அங்கு காலணிகள் அடிக்கடி வீசி எறியப்படுவதையும் அம்பலப் படுத்தும் வகையில்,

**"தேசிய பறவைக்கும்**

**கிட்டுவதில்லை**

**சபைகளில் பறக்கும்**

**வாய்ப்பு"[8]**

என்ற இக்கவிதை அமைகிறது. சமூகத்தின் மீதும் மக்களாட்சியின் மீதும் இந்திய இறையாண்மையின் மீதும் மக்களுக்கு இருக்கும் விரக்தி மனநிலையைக் குறிக்கும் வகையில் தனது மற்றொரு தொகுப்பான நிலாவனம் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்ற மற்றுமொரு கவிதையில் தேர்தலைப் பற்றிக் கூறும் பொழுது,

**"நாவில்**

**சொட்டு மருந்து**

**மழலைகளுக்கு**

**நகத்தில்**

**சொட்டு மருந்து**

**மக்களுக்கு**

**இரண்டும்**

**போலியோ"[9]**

எனப் பாடுகிறார். தேர்தலின் போது வாக்களிப்பது நமது ஜனநாயக கடமையாக இருப்பினும் அதனை அரசியல் அறிவுடன் தெளிவாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்று தமது தார்மீக பொறுப்பை வெளிப் படுத்துகிறார். இன்றைய அரசியலில் வாக்குறுதிகள் ஆட்சியாளரைத் தீர்மானிக் கின்றன எனலாம். தேர்தல் நேரத்தில் தருகின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவது சாத்தியம் இல்லை என்பது மக்களின் கருத்தாக இருக்கிறது என்றும் கூறப்படுகிறது. அரசியல்வாதிகளைப் பற்றிய கவிதையில்,

**"உண்டியலும்**

**சில**

**அரசியல்வாதிகளும்**

**ஒன்றுதான்**

**வாய் இருக்கும்**

**நாணயமே இருக்காது"[10]**

எனச் சாடுகிறார். மேலும், அரசியல்வாதி களின் நடவடிக்கைகளை மக்கள் கூர்ந்து கவனிக்கின்றனர் என்பதனை அறிந்து அரசியல்வாதிகள் நடந்துகொள்ள வேண்டும். அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் வாக்குறுதிகளைத் தரும்பொழுது காட்டும் அறத்தினைச் செயல்படுத்தும் பொழுது காட்டுவதற்குத் தவறி விடுகின்றனர் என்பது ஒட்டுமொத்த சமூகத்தின் குரலாக ஒலிக்கிறது. இன்றைய அரசியல் வாழ்வில் சிலர் நாணயத்துடன் நடந்துகொள்வதில்லை என்ற குற்றச்சாட்டை பல கவிதைகளில் நெல்லை ஜெயந்தா வெளிப்படுத்துகிறார். இதன்மூலம் மக்கள் எப்பொழுதும் எச்சரிக்கை உணர்வு டன் நடந்து கொண்டு அரசியல் அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது.

**வேளாண் சமூகம்**

உயிரினங்கள் வாழ்வதற்கு இயற்கை வளம் மிகவும் இன்றியமையாதது. தமிழர் சீரும் சிறப்புமாக வாழ்ந்த வாழ்வினை இலக்கியங் கள் உணர்த்துகின்றன. உலக மக்கள் பல வகையான வேலைகளைச் செய்தாலும் உழவுத் தொழிலையே உயிர்த் தொழிலாகப் போற்றினர் என்பதனை,

**"சுழன்றும் ஏர்ப்பினது உலகம்"[11]**

**என்று திருக்குறளும்,**

**"கடுமா பார்க்கும் கல்லா ஒருவற்கும்**

**உண்பது நாழி; உடுப்பவை இரண்டே"[12]**

என்று புறநானூறும் உலக உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்குத் தலையானத் தொழிலாக உழவே சிறந்து விளங்கியது என மக்கள் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றன. அன்றைய சமூகத்தில் தமிழர் பெருமக்கள் பொருள் வருவாயைத் தருகின்ற உழவுத் தொழிலை செய்கின்ற சமூகமாகத் தன்னை முன்னிலைப்படுத்தினர். அறிவியல் வளர்ச்சி யும் செயற்கையான வாழ்க்கை முறையும் இயற்கையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தின. உலகநகரமயமாதலின் மூலமாக வேளாண் நிலங்கள் பாதிப்படைந்தன. வறட்சியின் கொடுமை தாக்கியதால் தஞ்சாவூரில் தனது உயிரையும் விடுவதற்கு விவசாய மக்கள் துணிந்தனர். இந்நிலையைத் துயரத்துடன் நெல்லை ஜெயந்தா,

**"அன்று**

**நஞ்சை உண்டு**

**சாகுபடி ஆனது**

**இன்று**

**நஞ்சை உண்டு**

**சாகும்படி ஆனது"**[13]

என்ற கவிதையில் வெளிப்படுத்துவதனைக் காணலாம். இக்கவிதை படிக்கும் வாசகர்கள் அனைவரையும் கண்ணீர் விட வைக்கும் கவிதையாக அமைந்துள்ளது. இன்றையச் சமுதாய சூழலில் காணப்படும் வறண்டு போன நிலையில் உள்ள விவசாய நிலங்கள் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்துவிட்டது என்பதும் இதன்மூலம் புலனாகிறது. இதுபோன்று மற்றுமொரு கவிதையில்,

**"யார் பிச்சை இடுவது**

**நிலங்களே**

**திருவோடு ஏந்தினால்"**[14]

**என்றும்,**

**"உறங்கிவிட்டன**

**கலப்பைகள்**

**விழித்தே இருக்கின்றன**

**இரைப்பைகள்"**[15]

என்றும் கூறுவதிலிருந்து விவசாய மக்களின் வாழ்வில் போதுமான அளவிற்கு மழை பொழியாததின் காரணமாக ஏற்பட்ட வறட்சியானது, வலி மிகுந்த வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தியதனையும், எதிர்பாராத நேரத்தில் வாழ்வாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்பையும், வேளாண் சமூகத்தின் அவல நிலையையும் அறியமுடிகிறது. மனிதன் செயற்கைத்தனமான வாழ்க்கையினை விட்டு இயற்கைக்குத் திரும்பினாலும், தான் வாழ்ந்து வரும் சுற்றுச்சூழலை சீர் செய்தாலும் இந்நிலைப்பாடு மாற்றமடையும்.

## முடிவுரை

நெல்லை ஜெயந்தாவின் திணை மயக்கம் கவிதைகள் சமகாலப் பிரச்சனைகளைப் பாடுபொருளாகக் கொண்டு பாடப் பட்டுள்ளன. சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஒவ்வொரு தனிநபரும் சிந்திக்க வேண்டும் என்பதனையும், சமூக முன்னேற்றத்திற்கு மக்களின் சிந்தனைகளில் சீர் செய்ய வேண்டிய மனித நேயம், பகுத்தறிவு, அரசியல் விழிப்புணர்வு, வேளாண் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் போன்றவற்றை நெல்லை ஜெயந்தாவின் “திணை மயக்கம்” கவிதைகள் வெளிப்படுத்துகின்றன என்பதை அறிய முடிகிறது. இக்கவிதை வரிகள் சமூகத்தில் மாற்றத்திற்கான விதைகளை விதைக்கின்றன என்பதும் திண்ணம்.

## சான்றெண் விளக்கம்

1. நெல்லை ஜெயந்தா திணைமயக்கம் பக்கம் 17
2. மேலது. ப.60
3. மேலது.ப.60
4. மேலது.ப.25
5. மேலது.ப.20
6. மேலது.ப.20
7. மேலது. ப.45
8. மேலது.ப.32
9. நெல்லை ஜெயந்தா நிலாவனம் ப.19
10. மேலது .ப .25
11. திருக்குறள் 1031
12. புறநானூறு பாடல்189
13. நெல்லை ஜெயந்தா -திணை மயக்கம் ப.23
14. மேலது.ப.23
15. மேலது.ப.22

## துணைநூற் பட்டியல்

1. நெல்லை ஜெயந்தா, திணை மயக்கம், வாலி பதிப்பகம், எம் 8, அழகாபுரி நகர், ராமாபுரம்
2. சென்னை 600089
3. நெல்லை ஜெயந்தா, நிலாவனம், வாலி பதிப்பகம், எம் 8, அழகாபுரி நகர், ராமாபுரம் சென்னை 600089
4. டாக்டர் வ.சுப.மாணிக்கனார், திருக்குறள், மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை- 600014
5. புலவர் ஆ மாணிக்கனார், புறநானூறு, வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர் காம்ப்ளக்ஸ், 141, உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600017